**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்.**

முன்னிலை: **கா. நிலவரசன்,** B.A.,B.L,

நீதித்துறை நடுவர், திருப்போரூர்.

2026 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் வெள்ளிக்கிழமை

**பட்டியல் வழக்கு எண்.119/2024**

**வழக்கின் சுருக்கம்**

(விதி 106 குற்றவியல் நடைமுறை விதிகள் மற்றும் நீதிமுறை படிவம் 61)

| | | |
|---|---|---|
| 1. | புகார்தாரர் | திரு. நாராயணன், வயது 64, த/பெ.வெங்கடாச்சாரி, எண்.2, SBIOA யுனிட்டி என்கிலேவ், 6 வது தளம், K பிளாக், மாம்பாக்கம், சென்னை 127. |
| 2. | எதிரியின் பெயர் | சிவக்குமார் |
| 3. | எதிரியின் தந்தை / கணவர் பெயர் | ஜெயபால் |
| 4. | எதிரியின் தொழில் | – |
| 5. | எதிரியின் முகவரி | எண்.31/60, நேரு நகர், ஹஸ்தியாபுரம் சாலை, குரோம்பேட்டை, சென்னை 46 |
| 6. | எதிரியின் வயது | 47 |
| 7. | எதிரியின் இனம்/சமுதாயம் (காண்க நீதிமுறை படிவம் 61) | – |
| 8. | குற்ற நிகழ்வு நாள் | – |
| 9. | இறுதி அறிக்கை/தனி நபர் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 08.08.2024 |
| 10. | எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | 03.12.2024 |

| | | |
|---|---|---|
| 11. | எதிரி பிணையில் சென்ற நாள் | |
| 12. | வழக்கு அமர்வு நீதிமன்ற விசாரணைக்கு மாற்றப்பட்ட நாள் | எழவில்லை |
| 13. | விசாரணை தொடங்கப்பட்ட நாள் (பிரிவுகள் 207 மற்றும் 238 குவிமுச) | – |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | 14.05.2026 |
| 15. | தீர்ப்பு/உத்தரவு நாள் | 15.05.2026 |
| 16 | எதிரிக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்ட நாள் | எழவில்லை |
| 17. | காலதாமத்திற்க்கான காரணம் | எழவில்லை |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் 10.09.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 14.05.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.P.சாமுராஜ்** அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.D.ஆனந்தகிருஷ்ணன்** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதமும், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே ஏற்பட்ட 07/10/2023 தேதியிட்ட கடன் உடன்படிக்கையின் படி, எதிரி புகார்தாரருக்கு தரவேண்டிய ரூ.10,00,000/– தொகைக்காக எதிரி தான் கணக்கு வைத்துள்ள குரோம்பேட்டை பந்தன் வங்கியின் 03/04/2024 தேதியிட்ட காசோலை எண்.000009 என்ற ரூ.10,00,000/–கான காசோலையை தனது வங்கிக் கணக்கில் போதிய பணமின்றி

கொடுத்து காசோலை மோசடி செய்ததாக எதிரியின் மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் படி உரிய தண்டனை வழங்கவும், காசோலை தொகை மற்றும் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்காக ஏற்பட்ட செலவுத் தொகை ஆகியவற்றை எதிரி புகார்தாரருக்கு இழப்பீடாக அளிக்க கோரி இத்தனிநபர் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

2. இத்தனி நபர் புகார் புகார்தாரரின் பிரமாண வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, பிரிவு 138 உ/இ 142 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு புகார் நகலுடன் அழைப்பானை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகிய பிறகு, எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட புகார் சங்கதிகள் குறித்து வினவிய போது, எதிரி அதனை மறுத்ததால் புகார்தாரர் தரப்பு விசாரணைக்கு இந்நீதிமன்றம் உத்தரவிட்டது.

3. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>4. புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>**

i. புகார்தாரர் பாரத வங்கியின் ஓய்வு பெற்ற மேலாளர் ஆவார். எதிரி கிஷோர் கார்ஸ் என்ற பெயரில் டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வந்ததை தொடர்ந்து, புகார்தாரருக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட நீண்ட கால பழக்கத்தின் காரணமாக எதிரி தனது தொழில் தேவைக்காக பழைய கார்களை விலைக்கு வாங்க போவதாகவும், அதற்காக புகார்தாரரிடம் பணம் கேட்டதாகவும், அவ்வாறு புகார்தாரர் பணம் கொடுக்கும் பட்சத்தில் எதிரி வாங்கப்போகும் பழைய கார்களை புகார்தாரர் எதிரிடம் ஒப்படைத்தால் அதற்கான வாடகையை எதிரி புகார்தாரருக்கு கொடுப்பதாக உத்தரவாதம் அளித்துள்ளார்.

ii. எனவே புகார்தாரர் TN 10 BD 3314 Tata Zest என்ற காரை வாங்குவதற்காக எதிரிக்கு ரூ.5,00,000/-மும், அதே போன்று தனது அலுவலகத்தில் தன்னுடன் பணிபுரிந்த வளர்மதி என்பவர் TN 09 CX 2417 Tata Zest என்ற காரை வாங்குவதற்காக எதிரியிடம் ரூ.5,00,000/-மும், கொடுத்துள்ளனர். மேற்கண்ட கார்கள் வாங்குவதற்கு புகார்தாரர் மற்றும் அவரது அலுவலக நண்பர் வளர்மதி ஆகியோர் தொகையை கொடுத்த போதிலும்

மேற்கண்ட கார்கள் வாங்கப்பட்ட பிறகு அதன் பழைய உரிமையாளர்கள் பெயரிலே அந்த கார்கள் இருந்து வந்துள்ளது.

Iii. மேற்கண்ட கார்கள் வாங்கப்பட்ட பிறகு எதிரி புகார்தாரருடன் 10/06/2022 அன்று ஒரு, உடன்படிக்கை ஆவணத்தை ஏற்படுத்தி, 10/06/2022 முதல் 10/06/2025 வரை மூன்று ஆண்டுகளுக்கு மேற்கண்ட கார்களை மாத வாடகை ரூ.20,000/- அளிப்பதாக சொல்லி புகார்தாரரிடமும், புகார்தாரின் நண்பர் வளர்மதி என்பவரிடமும், உடன்படிக்கை ஏற்படுத்தி உள்ளார். ஆனால் அந்த உடன்படிக்கையின் படி எதிரி வாடகை தொகையை செலுத்ததால் டிசம்பர் 2022 முதல் ஏப்ரல் 2023 வரை வாடகை தொகை கூடியுள்ளது.

iv. எனவே மேற்கண்ட வாடகை நிலுவைத் தொகைக்காக எதிரி தனது மனைவி ஷாலினி என்பவரின் இரண்டு வங்கிக் காசோலைகளை ரூ.1,00,000/-க்கு புகார்தாரரிடம் கொடுத்துள்ளார். ஆனால் மேற்கண்ட இரண்டு காசோலைகளும் பணம் நிறுத்தப்பட்டதாக குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து புகார்தாரர் பலமுறை எதிரியிடம் மேற்கண்ட வாடகை

நிலுவைத் தொகையை கேட்டு வந்த நிலையில், எதிரி கடந்த 02/08/2023 அன்று ரூ.2,00,000/-ஐ இரண்டு கார்களுக்கும் சேர்த்து வாடகை நிலுவை தொகையாக ரொக்கமாக புகார்தாரிடம் கொடுத்துள்ளார். அந்த ரூ.2,00,000/- தொகையில் ரூ.1,00,000/- புகார்தாரர் வளர்மதியிடம் கொடுத்துள்ளார்.

v. அதன்பிறகு எதிரி வாடகை நிலுவைத் தொகையை செலுத்தவில்லை. எனவே புகார்தாரர் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எதிரியை அணுகி வாடகை நிலுவைத் தொகையை திருப்பி கேட்ட போது, எதிரி தன்னால் வாடகை தொகையை கொடுக்க முடியவில்லை என்றும், எனவே அந்த கார்களை அவரே வாங்கிக் கொள்வதாகவும், மேலும் வாடகை நிலுவைத் தொகையையும் ஆறு மாதங்களுக்குள் வட்டியுடன் திருப்பி செலுத்திவிடுவதாகவும் தெரிவித்துள்ளார். புகார்தாரரும் மேற்கண்ட பிரச்சனையிலிருந்து வெளியே வருவதற்காக அதற்கு சம்மதம் தெரிவித்து, இரண்டு கார்களையும் எதிரியிடம் விற்பதற்காக கடந்த 07/10/2023 அன்று ரூ.10,00,000/-கான கடன் உடன்படிக்கை ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளார்.

vi. மேற்கண்ட கடன் உடன்படிக்கையின் படி, எதிரி மேற்படி தொகையை 31/01/2024 அன்றோ அதற்கு முன்பாகவோ திருப்பி செலுத்துவது என்றும், அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் அதற்கான வட்டி தொகையையும் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு உள்ளார். ஆனால் மேற்கண்ட உடன்படிக்கையின் படி, எதிரி புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய தொகையை திருப்பி செலுத்தவில்லை. எனவே புகார்தாரர் தொடர்ந்து மேற்கண்ட தொகையை எதிரியிடம் கேட்டு வந்த நிலையில், எதிரி கடந்த 25/03/2024 அன்று தான் கணக்கு வைத்துள்ள குரோம்பேட்டை பந்தன் வங்கியின் 03/04/2024 தேதியிட்ட காசோலை எண்.000009 என்ற ரூ.10,00,000/-கான காசோலையை புகார்தாரரின் பெயருக்கு கொடுத்துள்ளார்.

vii. அந்த காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள மாம்பாக்கம் பாரத வங்கியில் கடந்த 03/04/2024 அன்று வசூலுக்காக தாக்கல் செய்தபோது, எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று அந்த காசோலை கடந்த 04/04/2024 அன்று திருப்புதல் குறிப்பாணை மூலமாக திருப்பப்பட்டுள்ளது. எனவே அதன் பிறகு புகார்தாரர் எதிரியை போன் மூலமாக

தொடர்பு கொண்டு காசோலை திருப்பப்பட்ட விவரத்தை தெரிவித்த போது, எதிரி அந்த காசோலையை மீண்டும் வசூலுக்காக தாக்கல் செய்யும் படி சொன்னதன் பேரில், புகார்தாரர் கடந்த 04/05/2024 அன்று அந்த காசோலையை மீண்டும் தன்னுடைய வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்துள்ளார்.

viii. ஆனால் மேற்கண்ட காசோலை மீண்டும் போதிய பணம் இல்லை என்று 06/05/2024 அன்று திருப்புதல் குறிப்பாணை மூலமாக திருப்பப்பட்டுள்ளது. அந்த காசோலை திருப்பப்பட்ட பிறகு புகார்தாரர் மீண்டும் எதிரியை தொடர்பு கொண்டபோது, எதிரி அதற்கு போதிய வகையில் பதில் அளிக்கவில்லை. எனவே புகார்தாரர் கடந்த 21/05/2024 அன்று தனது வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டும், உரிய பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. மேலும் காசோலை தொகையையும் திருப்பி செலுத்தவில்லை. எனவே எதிரி புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய மேற்கண்ட தொகையை கொடுக்காமலும், அதற்காக தனது வங்கி காசோலையை அளித்து நம்பகம் தெரிவித்து காசோலை மோசடி செய்ததாக புகார்தாரர் இந்த தனிநபர் புகாரை தாக்கல் செய்துள்ளார்.

ix. மேற்கண்ட சங்கதிகளை சார்ந்து புகார்தாரர் பு.சா.1 ஆக சாட்சியம் அளித்து 03.04.2024 தேதியிட்ட ரூ.10 லட்சம் தொகைக்கான எதிரியின் வங்கி காசோலை, அந்த காசோலை திருப்பட்டதற்கான 04.04.2024 மற்றும் 06.05.2024 தேதியிட்ட திருப்புதல் குறிப்பாணைகள், 21.05.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல், எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சல் ஒப்புகை அட்டை ஆகியவை பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து பிரிவு 313(1)ஆ குவிமுச–வின் கீழ் வினவியபோது, எதிரி தனக்கு எதிரான சாட்சியத்தை மறுத்துள்ளார். மேலும், எதிரி தரப்பிற்கு போதுமான காலம், தகுந்த வாய்ப்புக்கள் வழங்கியும், எதிரியின் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. பு.சா.1 ன் குறுக்கு விசாரணையின் போது எதிரியின் தரப்பில் 07/10/2023 தேதியிட்ட கடன் பத்திரம் மற்றும் 10/06/2023 தேதியிட்ட வாடகை உடன்படிக்கை ஆவணம் எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. புகார்தாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. எதிரியின் தரப்பில் எழுத்து பூர்வமான வாதம் தாக்கல் செய்யப்பட்டு வாதிடப்பட்டது. இருதரப்பு ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், எதிரி பிரிவு 138 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்துள்ளாரா? என்பதே ஆகும்.**

7. எதிரி பிரிவு 138 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்துள்ளாரா? என்பதை கவனத்துடன் பரிசீலித்ததில், புகார்தாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தில், எதிரி புகார்தாரரிடம் ரூ.5,00,000/−மும், அவரது அலுவலக நண்பர் வளர்மதி என்பவரிடம் ரூ.5,00,000/−மும் பணம் பெற்று இரண்டு பழைய கார்களை விலைக்கு வாங்கியதாகவும், அதற்காக புகார்தாரர் மற்றும் எதிரி ஆகியோர்ருக்கு இடையேயும், எதிரி மற்றும் புகார்தாரின் நண்பர் வளர்மதி ஆகியோர் இடையேயும், இரண்டு வாடகை உடன்படிக்கை ஆவணங்கள் ஏற்படுத்தி, அந்த இரு கார்களுக்கும் மூன்று ஆண்டுகளுக்கு மாதம் ரூ. 20,000/− வாடகை கொடுப்பதாக உடன்படிக்கை ஏற்பட்டதை தொடர்ந்து, மேற்கண்ட வாடகை நிலுவைத் தொகையை எதிரி கடந்த ஆகஸ்ட் 2023 க்கு பிறகு புகார்தாரரிடமும், அவரது நண்பர் வளர்மதி ஆகியோரும்

கொடுக்காத நிலையில் எதிரி மேற்கண்ட இரண்டு கார்களையும், அவரே விலைக்கு வாங்கிக் கொள்வதாகவும், மேலும் வாடகை நிலுவைத் தொகையையும் 31/01/2024 தேதிக்கு முன்பாக திருப்பிக் கொடுத்து விடுவதாகவும், அவ்வாறு கொடுக்கவில்லை என்றால் வட்டித்தொகையுடன் சேர்த்துக் கொடுப்பதாக சொல்லி ரூ.10,00,000/–ற்கு புகார்தாரரிடம் 07/10/2023 அன்று ஒரு கடன் ஆவணம் எழுதிக் கொடுத்ததாகவும், ஆனால் அந்த கடன் ஆவணத்தின் அடிப்படையிலும் எதிரி மேற்கண்ட தொகையை திருப்பி தராத நிலையில், புகார்தாரர் தொடர்ந்து எதிரியிடம் மேற்கண்ட தொகையை கேட்டு வந்த நிலையில் எதிரி தான் கணக்கு வைத்துள்ள வங்கியின் வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், அதனை புகார்தாரர் தனது வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்த போது போதிய பணம் இல்லை என்று அந்த காசோலை திருப்பப்பட்ட நிலையில், எதிரியின் வேண்டுகோளின் பேரில் மீண்டும் அந்த காசோலையை புகார்தாரர் வசூலுக்காக தாக்கல் செய்ததாகவும், இருந்தாலும் அந்த காசோலை போதிய பணமில்லை என்று திருப்பட்டதால் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டும் உரிய பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றும், காசோலை தொகையையும் திருப்பி செலுத்தவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

8. இந்நிலையில், புகார்தாரர் தரப்பில் 03/04/2024 தேதியிட்ட காசோலை 04/04/2024 மற்றும் 06/05/2024 ஆகிய தேதிகளிட்ட திருப்புதல் குறிப்பாணை, 21/05/2025 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல், அந்த அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை ஆகியவை புகார்தாரர் தரப்பில் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டிருந்தாலும், புகார்தாரர் தரப்பு வழக்கின் படி, மேற்கண்ட இரண்டு கார்கள் சம்பந்தமாக புகார்தாரர் மற்றும் அவரது நண்பர் வளர்மதி ஆகியோருக்கும், எதிரிக்கும் இடையே ஏற்பட்ட 10/06/2022 தேதியிட்ட கார் வாடகை உடன்படிக்கை ஆவணம் மற்றும் 07/10/2023 தேதியிட்ட கடன் ஆவணம் ஆகியவை புகார்தார்ர தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

9. ஆனால் மேற்கண்ட இரண்டு ஆவணங்களும் பு.சா.1ன் குறுக்கு விசாரணையின் போது எதிரியின் தரப்பில் எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் எதிரியின் தரப்பில், புகார்தாரர், வளர்மதி மற்றும் எதிரி ஆகியோருக்கிடையே ஏற்பட்டுள்ள கார் வாடகை உடன்படிக்கை ஆவணம் பற்றியும், 07/10/2023 தேதியிட்ட புகார்தாரர் மற்றும் எதிரி ஆகியோர்

இடையே ஏற்பட்ட கடன் உடன்படிக்கை ஆவணம் குறித்தும் எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை. மாறாக மேற்கண்ட 10/06/2022 தேதியிட்ட கார் வாடகை உடன்படிக்கை ஆவணம் மற்றும் புகார்தாரர் மற்றும் எதிரி ஆகியோருக்கிடையே ஏற்பட்டதாக சொல்லப்படும் 07/10/2023 தேதியிட்ட கடன் உடன்படிக்கை ஆவணம் ஆகியவை புகார்தாரர் தரப்பில் குறியீடு செய்யப்படாத நிலையில், அவை எதிரியின் தரப்பில் எ.சாஆ.1 மற்றும் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டதிலிருந்து மேற்கண்ட இரண்டு ஆவணங்களையும் எதிரி தனது வழக்கின் மூலமாக ஒப்புக்கொண்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மேலும் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எதிரி உடையது இல்லை என்றும், எதிரியின் தரப்பில் குறிப்பாக மறுக்கப்படவில்லை. மாறாக, எதிரி புகார்தாரருக்கு ரூ.2,00,000/- தர வேண்டி இருந்ததாகவும், அந்த தொகையையும் எதிரி புகார்தாரருக்கு திருப்பி கொடுத்துவிட்டதாகவும், அந்த கடனை பெற்றபோது எதிரி தனது மனைவியின் வங்கிக் காசோலையை பிணையமாக கொடுத்திருந்ததாகவும், அந்த கடனை திருப்பி செலுத்த காலதாமதம் ஏற்பட்டதால், தனது மனைவியின் காசோலையை திரும்ப பெற்றுக்

கொண்டு எதிரியின் காசோலையை புகார்தாரரிடம் திருப்பிக் கொடுத்ததாகவும், அதனை பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

11. ஆனால், எதிரியின் தரப்பில் பு.சா.1 விரிவாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு இருந்தாலும், மேற்கண்ட எதிர்வாதத்தை உறுதிப்படுத்தும் வகையில் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையானது அமையவில்லை. மேலும் மேற்கண்ட எதிர்வாதத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் எதிரியின் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை.

12. மேற்கண்ட சூழ்நிலையில், எதிரியின் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள எ.சா.ஆ.2 ஐ பார்வையிட்டதில், புகார்தாரர் மற்றும் எதிரி ஆகியோருக்கிடையே கடந்த 10/06/2022 அன்று TN 10 BD 3314 Tata zest கார் சம்பந்தமாக வாடகை உடன்படிக்கை ஆவணம் ஏற்பட்டுள்ளதும், அதன் படி 10/06/2022 முதல் 10/06/2025 காலத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு மாதம்

தோறும் ரூ.20,000/- வாடகை அளிக்க வேண்டும் என்று உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

13. ஆனால், மேற்கண்ட உடன்படிக்கை புகார்தாரர் மற்றும் எதிரி ஆகியோருக்கிடையே ஏற்படவில்லை என்றோ, அல்லது மற்றொரு கார் சம்பந்தமாக எதிரி மற்றும் வளர்மதி ஆகியோருக்கிடையே வாடகை உடன்படிக்கை ஆவணம் ஏற்படவில்லை என்றோ, மேற்கண்ட உடன்படிக்கை ஆவணத்தின் படியும், அந்த இரண்டு கார்களையும் எதிரி மேற்கண்ட நபர்களிடமிருந்து கிரையம் வாங்கி கொள்வதற்காகவும், கார் உடன்படிக்கை ஆவணத்தின் படி, வாடகை நிலுவைத் தொகையை திருப்பித் தருவதற்காகவும், மொத்தமாக சேர்த்து ரூ.10,00,000/-ஐ புகார்தாரருக்கு செலுத்துவதற்காக எ.சா.ஆ.1 ஆன கடன் உடன்படிக்கை ஆவணம் புகார்தாரர் மற்றும் எதிரி ஆகியோருக்கிடையே ஏற்படவில்லை என்றோ எதிரி தரப்பு வழக்கு அமையவில்லை.

14. மாறாக, மேற்கண்ட இரண்டு ஆவணங்களும் எதிரியின் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளதை பரிசீலிக்கும் போது, மேற்கண்ட இரண்டு ஆவணங்களின் சங்கதிகளையும், எதிரி ஒப்புக்கொண்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. மேலே விவாதித்த படி, வழக்கு காசோலையானது எதிரியின் மனைவியின் வங்கி காசோலையை புகார்தாரரிடமிருந்து திரும்ப பெறுவதற்காக தான், எதிரியால் புகார்தாருக்கு பிணையமாக கொடுக்கப்பட்டதாக எதிரியின் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டிருந்தாலும், மேற்கண்ட எதிர் வாதம் எதிரியின் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

15. எதிரியின் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட எதிர்வாதத்தில், எ.சா.ஆ.1 கடன் உடன்படிக்கை ஆவணத்தில், எதிரி புகார்தாரிடம் மேற்கண்ட தேதியில் ரூ.10,00,000/- கடன் வாங்கியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், புகார்தாரர் தரப்பு வழக்கின் படி, கார் வாடகை ஒப்பந்தம் சம்பந்தமாக ஏற்பட்ட நிலுவை தொகைக்காகவும், அந்த இரண்டு கார்களையும் எதிரி வாங்கியதற்காக கொடுக்க வேண்டிய தொகை ரூ.10,00,000/-ஐ எதிரி கொடுப்பதாக அதில்

குறிப்பிடப்படவில்லை என்றும், அதனை புகார்தாரும் தன்னுடைய குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், எனவே வழக்கு காசோலை போதிய மறுபயனுக்காக கொடுக்கப்படவில்லை என்று வாதிடப்பட்டுள்ளது.

16. மேற்கண்ட எதிர்வாதம் குறித்து பரிசீலனை செய்ததில், புகார்தாரரே தன்னுடைய புகார் மற்றும் சாட்சியங்களில் மேற்கண்ட கடன் ஆவணமானது, கார் வாடகை உடன்படிக்கை நிலுவைத் தொகை மற்றும் இரண்டு கார்களையும் எதிரி வாங்கிக் கொள்வதாக ஏற்பட்ட உடன்படிக்கை அடிப்படையில் தான் அந்த கடன் ஆவணம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. அதனை சார்ந்து தான் பு.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்திலும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. எனவே மேற்கண்ட கார் வாடகை நிலுவைத் தொகை மற்றும் இரண்டு கார்களையும் எதிரியே வாங்கிக் கொள்வதாக குறிப்பிட்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் மேற்கண்ட கடன் ஆவணம் ஏற்பட்டுள்ளதாக வழக்கு ஆவணங்களின் மூலமாக தெரியவரும் நிலையில், அதனை சார்ந்து தான் வழக்கு காசோலை எதிரியால் புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டதாக புகார்தாரர்

தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில், வழக்கு காசோலையானது போதுமான மறுபயனுக்காக தான் எதிரியால் புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து, எதிரி தரப்பு மேற்கண்ட எதிர்வாதம் எதிரி தரப்பு வழக்கிற்கு பயனளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே பிரிவு 139 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படியான நிரூபணம் செய்ய வேண்டிய சுமையை எதிரி ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் நிரூபிக்க தவறி உள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. எனவே எதிரி சட்டப்படியான மறுபயனுக்காக, அவர் கணக்கு வைத்துள்ள வங்கியின் ரூ.10,00,000/−ற்க்கான காசோலையை புகார்தாரருக்கு கொடுத்துள்ளதாக அனுமானித்தும், அந்த காசோலை எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளதால், எதிரி பிரிவு 138 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, எதிரி பிரிவு 138 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 278(2) பா.நா.சு.ச – கீழ் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், பிரிவு 395(3) பா.நி.ச−வின்**

**கீழ் காசோலை தொகை ரூ.10,00,000/—ஐ (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) எதிரி புகார்தாரருக்கு இழப்பீடாக வழங்கவும் உத்தரவிட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

வழக்கு சொத்து இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பிறகு இன்று (15.05.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்படுகிறது.

NILAVARASAN KASI — Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**<u>புகார்தாரர் தரப்பு சாட்சிகள் :—</u>**

| | |
|---|---|
| பு.சா.1 | திரு. நாராயணன் (புகார்தாரர்) |

**<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள் :—</u>**

| | | |
|---|---|---|
| பு.சா.ஆ.1 | 03.04.2024 | பந்தன் வங்கி காசோலை |
| பு.சா.ஆ.2 | 04.04.2024 | திருப்புதல் குறிப்பாணை |
| பு.சா.ஆ.3 | 06.05.2024 | திருப்புதல் குறிப்பாணை |
| பு.சா.ஆ.4 | 21.05.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| பு.சா.ஆ.5 | — | அஞ்சல் ஒப்புகை அட்டை |

**<u>புகார்தாரர் தரப்பு சான்றுப்பொருட்கள்:—</u>** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள்;** இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | 07.10.2023 | கடன் பத்திரம் |
| எ.சா.ஆ.2 | 10.06.2023 | வாடகை ஒப்பந்த பத்திரம் |

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்;** இல்லை.

**குறிப்பு :–**

| | |
|---|---|
| 1. | இவ்வழக்கின் சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப் படவில்லை. |
| 2. | தீர்ப்பு நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. |
| 3. | இத்தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், வேலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**திருப்போரூர்**
**பட்டியல் வழக்கு எண். 119/2024**
**நாள். 15.05.2026**

**தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.**
எதிரி ஆஜர்.

இறுதியாக, எதிரி பிரிவு 138 மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 278(2) பா.நா.சு.ச – கீழ் மூன்று மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், பிரிவு 395(3) பா.நி.ச–வின் கீழ் காசோலை தொகை ரூ.10,00,000/–ஐ (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) எதிரி புகார்தாரருக்கு இழப்பீடாக வழங்கவும் உத்தரவிட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**மா.உ.நீ.ம.நீ.ந**
**திருப்போரூர்.**